# தமிழ்நாடு அரசு

## பொருள்

அலுவலக நடைமுறை - அலுவலக ஆணை, கடிதங்கள் ஏனைய வெளியீடுகள் - கிறிஸ்துவ ஆண்டுக்கு நேரான தமிழ் ஆண்டு, திங்கள், நாள் குறியீடாகப் பயன்படுத்துதல் - ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீதிருத்த் (பணி-எ) துறை

அரசாணை (நிலை) எண்.91

ஆணை : நாள் 03.02.1981

3.5.1890இல் கோயம்புத்தூர் பேரூரில் கூடிய தமிழகப் புலவர் குழு திருவள்ளுவர் ஆண்டையும் தமிழ்த் திங்களையும் நாள் குறியீடாக அரசு அலுவல்களில் நடைமுறையிற் கொள்ளுமாறு ஒருமனதாகத் தீர்மானம் இயற்றி அதன் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை வேண்டியுள்ளது.

2. தமிழகப் புலவர் குழுவின் இத்தீர்மானத்தை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்தது. இந்திய அரசு வெளியிடும் கடிதங்களில் கிறிஸ்துவ ஆண்டுக்கு நேரான தேவநாகரி ஆண்டு, திங்கள், நாள் குறியீடாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேற்கண்ட முறையைப் பின்பற்றும் வகையில், தமிழக அரசு வெளியிடும் அனைத்து அலுவலக ஆணை, கடிதங்கள், செய்தி மற்றும் ஏனைய வெளியீடுகளிலும் இது முதற்கொண்டு கிறிஸ்துவ ஆண்டுடன் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் மற்றும் திருவள்ளுவர் ஆண்டையும் பயன்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

3.தலைமைத் துறைத் தலைவர்கள் தம் கீழ் பணியாற்றும் அனைத்து அலுவலகங்களிலும் மேற்கண்ட ஆணையைப் பின்பற்றும்படி வலியுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/- வே. கார்த்திகேயன்,<br>
தலைமைச் செயலாளர்